**சீனாவின் எக்ஸிம் வங்கியினால் (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டம் - 2022**

---

சீனாவின் எக்ஸிம் வங்கியினால் (ஹுனான் கிளை) நிதியளித்த மத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள வீதிகள் மற்றும் பாலங்களை அகலமாக்குதல் மற்றும் மேம்படுத்துதல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. 64.31 கிலோமீற்றர்கள் நீளமான அதாவது RDA வீதிகளின் 62.06 கிலோமீற்றர்கள் மற்றும் மாகாண வீதிகளின் 2.25 கிலோமீற்றர்கள் நீளமான வீதிகளை அகலப்படுத்தி மேம்படுத்துதல் மற்றும் 13 பாலங்களை மீள்நிர்மாணம் செய்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.செயற்திட்டத்தின் நடவடிக்கைகளானது ஒப்பந்த இலக்கம் ஒன்று மற்றும் இரண்டு என்பனவாக 02 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 12,674.90 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் அதில் ரூபா 10,774.74 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 85 மில்லியன் சீனா ஏற்றுமதி -இறக்குமதி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 1,900.16 மில்லியனுக்குச் சமமான ஐ.அ. டொலர் 15 மில்லியனான மிகுதித் தொகை இலங்கை அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2018 நவம்பர் 29 இல் தொடங்கியிருந்ததுடன் 2020 நவம்பர் 28 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளை பூர்த்திசெய்யும் திகதி 2022 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில்நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான 3 வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவைபெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்

**2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்கீட்டு குறைபாடுகள்/கணக்காய்வு அவதானிப்பு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | கணியப்பட்டியலினூடாக கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் செயற்திட்டத்தினால் மூலனமாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களும் ஆய்வுகூட உபகரணங்களும் சொத்துக்களாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. மேலும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறை மூலதனத்தில் மேற்கூறிய பெறுமதி உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே நடைமுறை வேலையின் பெறுமதி அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 91.51 | முழுச் செயற்திட்டமும் பூர்த்தி செய்யப்படும் வரை பகுதியளவில் பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டத்தை மூலதனமாக்க முடியாது | செயற்திட்ட சொத்துக்களை இனங்கண்டு பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இன் 39 ஆம் பிரிவின் பிரகாரம் வெளிநாட்டு நாணய மாற்று விகிதங்களின் மாற்றங்களின் விளைவான இலாபங்கள் அல்லது நட்டங்கள் காசுப் பாய்ச்சல் அல்ல அத்துடன் காசும் காசுக்குச் சமனானவைகளினதும் ஆரம்ப மீதிகளின் மற்றும் இறுதி மீதிகளின் தொடர்புபட்ட விளைவுகள் அறிக்கையிடப்படுதல் வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது நாணயமாற்று விகிதத்தின் மாற்றங்களின் மூலம் உருவாகிய ரூபா 344 மில்லியன் தொகை செயற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம் தோன்றிய காசுப்பாய்ச்சலாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனவே செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தோன்றிய காசோட்டம் அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 344 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 02 இனை மேலே குறிப்பிட்ட வகையில் வெளிநாட்டு நாணய செயற்திட்டங்களுக்கு பிரயோகிக்க முடியாது | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் பின்பற்றப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 07 இன் பிரிவுகள் 24 மற்றும் 25 களுக்கு இணங்க ஒரு சொத்தாக அறிந்துகொள்வதற்காக தகைமை பெறுகின்ற ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு விடயத்தினை அதன் கிரயம் அல்லது நியாயப் பெறுமதியில் அளவீடு செய்தல் வேண்டும். எனினும் வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து செயற்திட்டத்திற்குப் பெற்றுக்கொள்ளப்பட்ட 156 சொத்துக்கள் மேற்கூறிய நியமத்திற்கு இணங்க பெறுமதியிடப்பட்டிருக்கவில்லை. | - | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மாற்றப்பட்ட சொத்துக்களை செயற்திட்டத்தினால் மூலதனமாக்க முடியாது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும் |
| (iv) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 43(அ) பிரிவிற்கு இணங்க நிதி நிலைமைக் கூற்றிலுள்ள ஒவ்வொரு சொத்தும் பொறுப்பும் நிதிநிலைமைக் கூற்றுத் திகதியில் உள்ளவாறான வெளிநாட்டு நாணய மாற்று விகிதத்தில் பரிமாற்றம் செய்யப்படுதல் வேண்டும். எனினும் செயற்திட்டத்தின் கடன் மீதி தொடர்பான சமப்பாட்டு செம்மையாக்கல் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,926 மில்லியனாக இருந்தது. அதில் ரூபா 3,787 மில்லியன் மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 7,537 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் இலக்கம் 05 இன் 31 ஆம் பிரிவிற்கு இணங்க நாணயமாற்று வித்தியாசம் அறிந்துகொள்ளப்பட்டு தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் வெளிநாட்டுக் கடன் மற்றும் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை பின்பற்றுதல் வேண்டும் |

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள்

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமிமை/ கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளர்களின் சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| (i) | 01/2019 ஆம் இலக்க 2019 மார்ச் 15 ஆந் திகதிய முகாமைத்துவ கூற்றறிக்கையின் உப உறுப்புரை 9.3 | சுற்றறிக்கைக்கு இணங்க மீளாய்வாண்டின் போது செயற்திட்ட ஒழுங்கமைப்புக் குழுக் கூட்டம் நடாத்தப்படவில்லை. | கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை, எரிபொருள் தட்டுப்பாடு, பொருளாதாரப் பிரச்சினை என்பவற்றின் காரணமாக செயற்திட்ட ஒழுங்கமைப்புக் குழுக் கூட்டத்தினை நடாத்த முடியவில்லை. | எடுத்துரைக்கப்பட்ட வகையில் ஒழுங்கமைப்பு குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுதத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2009 ஏப்ரல் 16 மற்றும் 2009 யூன் 17 ஆந் திகதிகளில் வழங்கப்பட்ட முறையே 09/2009 மற்றும் 09/2009/I ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்திட்ட பணிப்பானர், செயற்திட்ட பிரதி பணிப்பாளர், கணக்காளர், ஆகியோரினால் அவர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலினை மெய்மையாய்வு செய்வதற்கு விரல் அடையாளமிடும் இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | ஒரு தேசிய முன்னுரிமைச் செய்ற்திட்டத்திற்கான தங்களின் தற்காலிக நியமனத்தின் காரணமாக இந்த உத்தியோகத்தர்கள் எக்ஸிம் ஹூனான் செயற்திட்டத்தின் அதே அலுவலகத்தில் தங்களது கடமைகளை தொடர்வதற்கு முடியாதிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 ஒப்பந்த நிருவாகம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (i) | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயத்தினை ரூபா 20,500 மில்லியன் வரை திருத்துவதற்கு அமைச்சரவையின் பெறுகைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 மார்ச் 03 ஆந் திகதி வரையும் அவ்வாறான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | திருத்திய கிரய மதிப்பீடு தொடர்பான விபரமான அறிக்கையானது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசுடன் 2023 ஏப்ரல் 03 ஆந் திகதி SCAPC இற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | அமைச்சரவை தீர்மானத்துடன் இணங்கியிருப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 05 வீதிகளும் 24 பாலங்களும் பாதிப்புக்களுடன் 2022 சனவரி 31 ஆந் திகதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதிவரை அப்பாதிப்புக்களை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருள் தட்டுப்பாடு மற்றும் காணியை பெற்றுக்கொள்ளும் செயன்முறையிலுள்ள தாமதங்களின் காரணமாக ஒப்பந்தககாரரினால் சில வேலைகளை முடிவுறுத்த முயடிாதிருந்தது. | பாதிப்புக்களை திருத்தம் செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | வெளிநாட்டு அன்பளிப்பாளருடன் 2018 யூன் 07 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு இணங்க செயற்திட்ட காலத்தை 2021 செப்தெம்பர் 28 ஆந் திகதியில் முடிவுறுத்துவதற்கு பட்டியலப்படுத்தப்பட்டிருந்தது. ஆனால் 2022 செப்தெம்பர் 28 ஆந் திகதி வரையும் செயற்திட்ட காலம் நீடிக்கப்பட்டிருந்தது. மேலும் காலநீடிப்புச் செய்யப்பட்ட காலத்திற்குள் ஒப்பந்தத்ததை பூர்த்திசெய்வதற்கு முடியாமையின் காரணமாக போக்குவரத்து பெருந்தெருக்கள் அமைச்சானது 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் செயற்திட்ட | கடன் உடன்படிக்கையினை 2023/12/31 வரையும் நீடிப்பதற்கு அமைச்சரவையிடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ப்பட்டது. அனபளிப்பாளருடன் ஒருங்கிணைப்புச் செய்து கால நீடிப்பினை முடிவுறுத்துவதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. | வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தை 2023 திசெம்பர் 31 வரையும் நீடிப்பதற்கு அங்கீகாரத்தினை வேண்டியிருந்தது. எனினும் உரிய அங்கீகாரம் 2023 மார்ச் 27 ஆந் திகதி வரையும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | செயற்திட்டத்தின் செயலாற்றல் குறிகாட்டியினை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. ஆகவே செயற்திட்ட குறிக்கோள்களை அடைந்து கொள்வதன் செயல் முன்னேற்றத்தினை கணக்காய்வில் மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | பூர்த்த்திசெய்யப்பட்ட வீதிகளின் நீளம் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட பாலங்களின் எண்ணிக்கையானது முக்கிய செயலாற்றல் குறிகாட்டியாக இனங்காணப்பட்டது. | "SMART" முக்கிய செயலாற்றல் குறிகாட்டிகள் தாபிக்கப்படுதல் வேண்டும். |